Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 324/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ராமசந்திரன் |
| Father's Name | -- | ஆறுச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 5th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது செங்குட்டுபாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கட்டிட வேலைபார்த்து வருகிறேன்.கடந்த 25.03.2018 அன்று காலை சுமார் 6,6.30 மணியளவில் செங்குட்டுபாளையத்தில் இருந்து பொள்ளாச்சிக்கு நானும் எனக்கு தெரிந்த விஜயன் என்ற நபரும் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது,எனக்கு முன்பாக முருகேசன் என்பவர் ஆக்டிவா வண்டியில் சென்றுகொண்டிருந்தார். ராசக்காபாளையம் மேட்டில் ஆலம்பாளையம் பிரிவு அருகே வந்துகொண்டிருந்தபோது , எதிரே வந்த பால் வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. இருவண்டிகளும் ஒன்றோடு ஒன்று மோதியது. இருசக்கரவாகனத்தில் வந்தவர் முருகேசன் தூக்கி எறியப்பட்டு மண்டை இரண்டாக பிளந்துவிட்டது. பொலிரோ பிரேக் அடித்ததில் அது தூக்கி எறியப்பட்டது. பின்பு அடிபட்டவருக்கு மூளை சிதறி இருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலமாக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். இதுசம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அதசாஆ.1. பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரிதான் மேற்படி பொலிரோ பால் வண்டியை ஓட்டிவந்த நபர் ஆவார்.

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஎ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 324/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ஆனந்தன் |
| Father's Name | -- | ஆறுச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 5th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது செங்குட்டுபாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கட்டிட வேலைபார்த்து வருகிறேன். கடந்த 25.03.2018 அன்று காலை சுமார் 6.15, மணியளவில் வேலைக்கு சென்றார். எனது தம்பி முருகேசனுக்கு ஆலம்பாளையம் பிரிவு அருகேபால் வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாக அசா.1 தகவல் கூற பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்றுபார்த்தேன். அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்திருந்தார். பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2

பொள்ளாச்சி